பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 10 சனிக்கிழமை (26.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 271

### இலங்கை நெருக்கடி

# இராஜதந்திர மட்டங்களில் ஒஸ்லோவில் ஆலோசனை

## சொல்ஹெய்ம் - ரணில் - ஷியாம் சரண் தனித்தனியாகவும் கூட்டாகவும் சந்திப்பு











ஒஸ்லோ, ஓகஸ்ட் 26

நெருக்கடி நிலையை எட்டியிருக்கும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்தும் அதனைத் தீர்ப்பதற்கு விரைந்து எடுக்கப்படக் கூடிய அவசர நடவடிக்கைகள் குறித்தும் அனுசரணைத் தரப்பான நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இராஜதந்திர மட்டங்களில் பல சுற்று ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன எனத் தெரிகின்றது. நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், அனுசரணைப் பணிக்கு பொறுப்பான விசேட தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவர், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கட்சியின் பிரமுகர் மிலிந்த மொறகொட, இந்திய வெளியுறவு செயலாளர் ஷியாம் சரண் எனத் தற்போது நோர்வேயில் தங்கியிருக்கும் - இலங்கை விவகாரத்தில் ஈடுபாடுடைய - பல்வேறு பிரமுகர்களும் இவ்விடயம் குறித்துத் தங்களுக்குள் தனித் தனியாகவும் கூட்டாகவும் பல்வேறு சந்திப்புகளையும், கலந்துரையாடல்களையும் நடத்திவருகின்றனர் எனத் தெரிகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரின் கட்சியின் முக்கிய பிரமுகர் மிலிந்த மொறகொடவும் தற்போது ஒஸ்லோவில் தங்கியுள்ளனர்.

வேறு ஒரு மாநாட்டுக்காக ஒஸ்லோ வந்திருக்கும் இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் அங்கு இலங்கை விவகாரம் தொர்பாக இந்தியாவின் சிரத்தையை சம்பந்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வதிரியில் 16பேர் கைது!

கரவெட்டி, ஓக.26

வடமராட்சி, வதிரி தேவரையாளி பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளையில் தத்தமது வீடுகளுக்கு முன்பாக நின்றிருந்த 16 பேரை படையினர் கைதுசெய்திருக்கின்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாயில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஓக.26

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மரக்கறி வியாபாரி ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மானிப்பாய், கட்டுடைப் பகுதியைச் சேர்ந்த

(06 ஆம் பக்கம் பார்க்க)

## 'மிக்' ரக விமானங்கள் புதுக்குடியிருப்பில் நேற்றும் தாக்குதல்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் விமானப்படையின் 'மிக்' ரக போர் விமானங்கள் நேற்றுக் காலை மூன்று தடவைகள் தாக்குதல்கள் நடத்தியிருக்கின்றன.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் விடுதலைப் புலிகளுடன் நேற்றுச் சந்திப்பு



கிளிநொச்சி,ஓக.26

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் நான்கு மணிக்கு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தற்போதைய தலைவர் உல்ப் கென்றிக்சனும் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் லார்ஸ் கோஹானும் கலந்துகொண்டனர்.

இம்மாதம் 31ஆம் திகதியுடன்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## பங்குத்தந்தையின் நிலைவரத்தை அறியத்தரக்கோரி யாழ். பேராலயம் முன்றிலில் தொடர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,ஓக.26

அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தை அருட்திரு ஜிம்பிறவுண் அடிகளார் மற்றும் அவரின் உதவியாளர் வி.விமலதாசன் ஆகியோர் தொடர்பான பதிலை உடனடியாகத் தருமாறு கோரி யாழ். பேராலயம் முன்றிலில் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமைமுதல் தினந்தோறும் மு.ப. 11 மணிமுதல் 2 மணி வரை இந்தப் போராட்டம் நடைபெறும்.

யாழ். மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு இந்தப் போராட்டத்திற்கான அழைப்பை விடுத்துள்ளது. உண்ணாவிரதப் போராட்டம் குறித்து மேற்படி ஆணைக்குழு விடுத்த செய்திக்குறிப்பில் -

பங்குத்தந்தையும் அவரது உதவியாளரும் முற்றிலும் கடற்படையினரின் கட்டுப்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## 'றுகுணு' சரக்குக் கப்பலிலிருந்து பொருள் இறக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.26

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் வந்துசேர்ந்துள்ள 'றுகுணு' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி நேற்று பருத்தித்துறைத் துறைமுகத்தில் ஆரம்பமாகியது.

கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டதும் அவை லொறிகள் மூலம் கோண்டாவிலில் உள்ள அரச களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களை

(06 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான வான் தாக்குதல்களுக்கு பாக். படை அதிகாரிகள் குழு வழி காட்டுகிறது

### ஓய்வுபெற்ற இந்தியப் புலனாய்வு அதிகாரி வெளியிடும் தகவல் இது

கொழும்பு, ஓக.26

''பாகிஸ்தான் விமானப் படையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பில் தங்கியிருந்து, விடுதலைப் புலிகளுக்கு எதிரான வான் வழித்தாக்குதல் நடவடிக்கைகளை இலங்கைப் படைகள் மேற்கொள்வதற்கு வழிகாட்டி வருகின்றது.''

இந்தியாவின் 'றோ' அமைப்பின் மேலதிகச் செயலாளராகவும், பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவின் தலைவராகவும் சுமார் பத்து ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற பி.இராமன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தற்போது சென்னை, 'விடயங்களுக்குரிய கல்வி நிறுவனத்தின்' இயக்குநராகப்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் 161 பேர் இன்று கப்பல் மூலம் திருமலைக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.26

குடாநாட்டிலிருந்து 161 பயணிகள் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டிலான கப்பலில் இன்று சனிக்கிழமை திருகோணமலைக்கு அழைத்துச்செல்லப்படவிருக்கின்றனர்.

பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து ஏற்றப்படும் இந்தப் பயணிகள் திருகோணமலையைச் சென்றடைந்ததும் அங்கிருந்து பஸ்கள்மூலம் கொழும் புக்கு அழைத்துச்செல்லப்படுவர். கப்பலுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழித்துணை வழங்கும்.

இந்தக் கப்பலில் செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 161 பேரையும் இன்று காலை 9மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு அருகில் உள்ள மைதானத்திற்கு வருமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

அங்கு இடம்பெறும் சோதனைகளின்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோஸப் அனுதாபப் பிரேரணை மீது உரையாற்ற எம்.பிக்கள் எவருமில்லை

### இதனால் நேற்று நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் அமரர் ஜோஸப் பரராஜசிங்கத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது உரையாற்ற எம்.பிக்கள் இல்லாத காரணத்தால் நேற்று நாடாளுமன்றம் 20 நிமிடங்களே கூடியது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார தலைமையில் கூடியது. சபாநாயகரின் அறிவிப்புகளுக்குப் பின்னர் வாய்மூல விடைகளுக்கான கேள்வி நேரம் இடம்பெற்றது. கேள்விகளுக்கு எழுத்து மூலம் முன்னறிவித்தல் கொடுத்த எம்.பிக்கள் சபையிலிருக்கவில்லை. இதனால், அவை

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் லாஸ்ஜென் ஸோல்வ்பேர்க்கும், பதவி விலகிச் செல்லும் தலைவர் மேஜர் ஜெனரல் உல்வ் ஹென்றிக்சனும் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேச்சுநடத்தினர். மரியாதையின் நிமித்தமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இறுதியாகவுள்ள இரண்டு படங்களிலும் கண்காணிப்புக்குழுவின் தலைவர்களுக்கு நினைவுப் பரிசில் வழங்கப்படுகின்றது.





அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தை அருட்திரு ஜிம்புறவுண் அடிகளாரையும் அவரது உதவியாளரையும் விடுவிக்கக்கோரி மன்னார், புதுக்குடியிருப்பு மாவட்டங்களில் நேற்றையதினம் கண்டனப் பேரணிகள் நடைபெற்றன. முதலிரு படங்களும் மன்னாரில் இடம்பெற்ற பேரணியினையும் அடுத்துள்ள இரு படங்களும் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற பேரணியையும் காட்டுகின்றன.

# துயரச் சம்பவத்தின் உண்மை மறைக்கப்படக் கூடாது

## பங்குத்தந்தை காணாமல்போன விவகாரத்தில் யாழ். ஆயர்



சுண்டுக்குளி யுவானியார் ஆலயத்தில் வியாழனன்று நடைபெற்ற செபவழிபாட்டில் யாழ். ஆயர் உரையாற்றுகின்றார்.

யாழ்ப்பாணம்,ஓக.26

துன்பமான தருணத்தில் துயரச் சம்பவம் ஒன்றின் உண்மை மறைக்கப்படக்கூடாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். ஆயர்மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தை அருட்திரு ஜிம்புறவுண் அடிகளாரும் அவரது உதவியாளரும் காணாமல்போன சம்பவம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஆயரின் அறிக்கை வருமாறு:-

ஜிம்புறவுண் அடிகளாரும் அவருடன் சென்ற விமலதாஸ் என்பவரும் அல்லைப்பிட்டிக் கிராமத்தில் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமற்போயுள்ளனர் என்ற துயரச் செய்தியை அதிர்ச்சியுடனும் ஆழ்ந்த சோகத்துடனும் உறுதிப்படுத்துகிறோம்.

அல்லைப்பிட்டி பிலிப்பு நேரியார் ஆலயத்தில் எறிகணை விழுந்து ஆலயம் சிதைவுற்ற பொழுது 20 பேர் அகால மரணமாகி 30இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்த போது ஜிம்புறவுண் அடிகளார் மயிரிழையில் உயிர்தப்பினார்.

### அல்லைப்பிட்டிக்குச் சென்றவரை காணவில்லை

காயமுற்றவர்களையும் அஞ்சி நடுங்கியவர்களையும் கடற்படையினரின் எதிர்ப்பையும் பாராது ஊர்காவற்றுறைக்குக் கொண்டு சேர்த்தார். ஊர்காவற்றுறை மரியாள் ஆலயத்தில் தஞ்சமடைந்த மக்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்தபின்னர் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விமலதாஸ் என்பவருடன் அல்லைப்பிட்டிக்குச் சென்ற பின்னர் காணாமற்போயுள்ளார்.

### பலருக்கு அறிவித்தும் 6 நாள்களாகப் பதிலில்லை

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்களுக்கும் பாப்பரசரின் பிரதிநிதிக்கும் இவ் விடயத்தைத் தெரிவித்து 6 நாள்களாகியும் பதில் ஏதும் கிடைக்காத நிலையில், அவர் உயிரோடு இருக்கிறாரா என்ற ஏக்கத்தில் உள்ளோம்.

துன்பமான இத் தருணத்தில் இத்துயரச் சம்பவத்தின் உண்மை மறைக்கப்படக்கூடாது என்பதே அனைவரின் விருப்பமாகும். இறை துணையில் நம்பிக்கை வைத்து இவர்களது குடும்பத்தினரோடு இணைந்து நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையில் இருப்போம். - என்று அதில் உள்ளது.

# சிப்பாயும், மற்றொருவரும் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா,ஓக.26

வவுனியாவில் இனந்தெரியாத நபர்களினால் அநுராதபுரத்தினைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் இராணுவச்சிப்பாய் என்று அடையாளம் காணப்பட்டுள்ள போதும் மற்றைய நபர் என்ன தொழில் செய்பவர் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை என்று வவுனியா பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாயும் மற்றைய நபரும் சிவில் உடையில் காணப்பட்டனர். நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக அயலவர்கள், மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியனிடம் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட இராணுவ சிப்பாய் டி.எம்.திசாநாயக்க (வயது 33) என்றும் மற்றையவர் அந்திர கந்திகே உபூல் பாலாறு (வயது 30) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒருவரின் கால்கள் ரயிலில் அகப்பட்டு சிதைந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக பிரதேச கிராம சேவையாளர், பொலீஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து பொலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினர்.

மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியனும் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். மேலதிக விசாரணைகளை நடத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் இராணுவச் சிப்பாய் என்பதனை இராணுவ அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். (164)

### போதகர் குடும்பத்தினர் பாதுகாப்பாக உள்ளனர் என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.26

மீசாலை கிழக்கில் இயங்கும் இலங்கை அப்போஸ்தல சபையின் போதகர் வின்சன் வினோத ராஜாவும் அவரது குடும்பத்தினரும் அங்கு பாதுகாப்பாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

போதகரையும் அவரது குடும்பத்தினரையும் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து, இச்சபையின் போதகர் ஒருவர் நேற்று மீசாலைக்குச் சென்றார் என்றும் -

காணாமற்போனதாகக் கருதப்பட்ட போதகர் குடும்பம் அங்கு பாதுகாப்பாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (1)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக.

**திருமண அழைப்பு**

நிகழும் சர்வ மங்களகரமான வியவருடம் ஆவணித் திங்கள் 11ஆம் நாள் (27.08.2006) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.23 மணிமுதல் 11.15 மணிவரையுள்ள அத்த நட்சத்திரமும், சதுர்த்தி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய துலா லக்கின சுபயோக சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி.மாசிலாமணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **சுதர்சன்** அவர்களுக்கும்

திரு.திருமதி.சின்னராசா தம்பதியரின் ஏக புத்திரி திருநிறை செல்வி **ஜெயலக்சுமி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மணிமண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

30.08.2006 புதன்கிழமை மணமகள் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

சிவக்கொழுந்து மாசிலாமணி குடும்பம்,
479, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 222 3515

திரு.திருமதி. சின்னராசா குடும்பம்,
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்,
(3ஆம் ஒழுங்கை அருகில்) தொ.பே. [illegible]

(இதயம் கனிந்த இரு இல்ல அழைப்பு)



**கண்ணீர் அஞ்சலி**

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.வடக்குப் பிரிவுத் தலைவர்

உயர்திரு.சி.சிவமகாராசா அவர்களின்

திடீர் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகத்தவர்கள், அங்கத்தவர்கள், தொண்டர்கள்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், வலி.வடக்குப் பிரிவு.

(53336)



**ஓராண்டு நினைவஞ்சலி**



ஸ்ரீபன் ஜோண்சன் பிறேமானந்

தோற்றம் 15✱06✱1970 மறைவு 26✱08✱2005

எங்கள் அன்புத் தம்பி **ஜோண்சன்** நீங்கள் மறைந்து இன்றுடன் ஓராண்டு நிறைவடைந்துள்ளது.
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் நிறைவுற்றாலும் உங்களின் இன்முகமும் கனிவான பேச்சும் எங்களின் மனங்களை விட்டு என்றும் மறையாது. இந்நாளில் உங்களை நினைவு கூரும்:

நல்லூர், யாழ்ப்பாணம். (53335) **அக்கா குடும்பத்தினர்.**



**மரண அறிவித்தல்**

*வைரமுத்து தம்பிராசா*

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தம்பிராசா நேற்று (25.08.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2006) சனிக்கிழமை ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொட்டைக்காடு லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

*தகவல்: குடும்பத்தினர்.*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமலைக்கு இன்று கப்பலில் பயணம் செய்யத் தெரிவானோர் விவரம்

| No. | Name | Address in Jaffna |
|---|---|---|
| 01. | Schmidt Bruno | ACF House, 40 Arasa Road, Nallur, Jaffna |
| 02. | Nteziryayo Raoul Love | ACF House, 40 Arasa Road, Nallur, Jaffna. |
| 03. | Poncet Richard | ACF House, 40 Arasa Road, Nallur, Jaffna. |
| 04. | Roy Pranay Ranjan | 290, Kandy Road, Ariyalai |
| 05. | Nienhuys Sjoerd | Maia's UN Guest House, Temple Road |
| 06. | Nienhuys Doreen Joyce | Maia's UN Guest House, Temple Road |
| 07. | Adam Alexis | Maia's UN Guest House, Temple Road |
| 08. | Kariuki Jeremiah Njuguna | At NRC House, 212/1 Temple Road |
| 09. | Schabarum Awalter Alfons | Maia's UN Guest House, Temple Road |
| 10. | Oljala Eero | Contact thru HALO |
| 11. | Parsons Charles Kim | HALO House/ Compound/ Mobile |
| 12. | Tol Anton Wietse | Maia's UN Guest House, Temple Road |
| 13. | Abis Rafael Urbiztondo | NRC House, 212/1 Temple Road |
| 14. | Onoyama Ryo (Husband of Akiko Kadowaki) | 34 Chetty Street, Nallur, Jaffna |
| 15. | Kadowaki Akiko (Wife of Ryo Onoyama) | 34 Chetty Street, Nallur, Jaffna |
| 16. | Crosby Craig David | Kopay, Next to Police Station |
| 17. | Yapp Martin | HALO House/ Compound/ Mobile |
| 18. | Danvers Kate (Wife of David Schley) | GTZ Guest House, Temple Road |
| 19. | Schley David (Husband of Kate Danvers) | GTZ Guest House, Temple Road |
| 20. | Beminyimana Pascal | WVI Gust House, 1st Cross Street |
| 21. | Anthony Stanistans, Mr. | 83/4, Beach Road, Jaffna |
| 22. | Anthony Geneviene, Mrs | 83/4, Beach Road, Jaffna |
| 23. | Anthony Francom, Mast. | 83/4, Beach Road, Jaffna |
| 24. | Atputharajah Thambimuthu, Mr | 144,Ramanathan Road, Jaffna |
| 25. | Atputharajah Thacksyananthi, Mrs | 144,Ramanathan Road, Jaffna |
| 26. | Jesujeyarajah Pilendren, Mr | St.James Road, Illavalai |
| 27. | Jesujeyarajah Nirmala, Mrs | St.James Road, Illavalai |
| 28. | Jesujeyarajah Belinda, Ms | St.James Road, Illavalai |
| 29. | Jesujeyarajah Shiamala, Ms | St.James Road, Illavalai |
| 30. | Jeyabalan Kamistika, Ms. | Kumarapath, Kantharodai |
| 31. | Jeyabalan Thurka, Ms. | Kumarapath, Kantharodai |
| 32. | Jeyabalan Mahendren Ranjanathan, Mr. | Kumarapath, Kantharodai |
| 33. | Niranjan Ramanathan, Mr | 527, KKS Road, Jaffna |
| 34. | Niranjan Abisha, Ms | 527, KKS Road, Jaffna |
| 35. | Niranjan Mathurah | 527, KKS Road, Jaffna |
| 36. | Ratnaseelan Sathanayaki Anton Maria | Vishvakula Veethy, Point Pedro |
| 37. | Ratnaseelan Daniella Anton Maria | Vishvakula Veethy, Point Pedro |
| 38. | Ratnaseelan Alessio Anton Maria | Vishvakula Veethy, Point Pedro |
| 39. | Ratnaseelan Marijeria Anton Maria | Vishvakula Veethy, Point Pedro |
| 40. | Raveendren Thangarajah, Mr | Kaddaiveli School, Karaveddy |
| 41. | Raveendren Sugitha, Mrs | Kaddaiveli School, Karaveddy |
| 42. | Raveendren Sayanthan, Mr | Kaddaiveli School, Karaveddy |
| 43. | Raveendren Kavinthan, Mr | Kaddaiveli School, Karaveddy |
| 44. | Raveendren Kajaani, Ms | Kaddaiveli School, Karaveddy |
| 45. | Thavanathan Premasudha | Luxmy Bawan, |
| 46. | Thavanathan Ponnuthurai, Mr | Luxmy Bawan, |
| 47. | Thavanathan Luxshimee, Ms | Luxmy Bawan, |
| 48. | Thavanathan Vithiya, Ms | Luxmy Bawan, |
| 49. | Utharsmon Vivekananthan ,Mr. | 588/2,Navalar Road, Ariyalai |
| 50. | Utharsmon Preethini Neirujee, Ms | 588/2,Navalar Road, Ariyalai |
| 51. | Utharsmon Nilanee Neirujee, Ms | 588/2,Navalar Road, Ariyalai |
| 52. | Utharsmon Jeyarani Nehrujee | 588/2,Navalar Road, Ariyalai |
| 53. | Uthayakumar Kamalambikai, | Yama Junction. Uduvil |
| 54. | Uthayakumar Sahana, Ms | Yama Junction. Uduvil |
| 55. | Uthayakumar Pragash, Mr | Yama Junction. Uduvil |
| 56. | Rasavathanan Kanagarajasingam | Arasakesari pillaiyar Veethy |
| 57. | Rasavathanan Jeyadevi (Mrs) | Arasakesari pillaiyar Veethy |
| 58. | Rasavathanan Rishi Mas | Arasakesari pillaiyar Veethy |
| 59. | Rasavathanan Mithuulan Mast | Arasakesari pillaiyar Veethy |
| 60. | Theivendraraj Jesuthasan | C/O Mr.Pathmanathan |
| 61. | Theivendraraj Donishiya Luxshini | C/O Mr.Pathmanathan |
| 62. | Atputharajah Rasiah | K.Vanithamalar(Sister) |
| 63. | Atputharaja Santhiyakumary | K.Vanithamalar(Sister) |
| 64. | Atputharaja Sacane | K.Vanithamalar(Sister) |
| 65. | Jeyabala Selvakala | Urumpirai East, Urumpirai |
| 66. | Jeyabala Renu | C/o S.Vigneswaran GS |
| 67. | Jeyabala Sagana | JE 332875 |
| 68. | Sivakumar Kaviya | JE 455457 |
| 69. | Dushiyanthan Arasaratnam | 351, Temple Road, Nallur |
| 70. | Dushiyanthan Mathana | 351, Temple Road, Nallur |
| 71. | Dushiyanthan Laxen | 351, Temple Road, Nallur |
| 72. | Dushiyanthan Sweethan | 351, Temple Road, Nallur |
| 73. | Patterson William | Tech International |
| 74. | Suthendran Chandrika | Navaly |
| 75. | Suthendran Shivam | Navaly |
| 76. | Tharmamoorthy Tharmalingam | Mrs.Rasiah ponnampalam |
| 77. | Tharmamoorthy Piruthiya | Mrs.Rasiah ponnampalam |
| 78. | Tharmamoorthy Thuvaraka | Mrs.Rasiah ponnampalam |
| 79. | Tharmamoorthy Sanujan | Mrs.Rasiah ponnampalam |
| 80. | Mohanadas Thedsanamoorthy | Thirunelvely North, Jaffna |
| 81. | Mohanadas Gengadevy | Thirunelvely North, Jaffna |

| No. | Name | Address in Jaffna |
|---|---|---|
| 82. | Mohanadas Piravena | Thirunelvely North , Jaffna |
| 83. | Mohanadas Sachiyan | Thirunelvely North , Jaffna |
| 84. | Kunaratnam Vijeyanathan | Hospital Road, Chankanai |
| 85. | Kunaratnam Vijeyakanthan | Hospital Road, Chankanai |
| 86. | Rajaratnam Krishnagopal | Kinatadipulan, Karanavai |
| 87. | Rajaratnam Silenthanai | Kinatadipulan, Karanavai |
| 88. | Rajaratnam Thusaraka | Kinatadipulan, Karanavai |
| 89. | Surendran Kanchana | 38/1 Kachcheri East lane, Jaffna |
| 90. | Surendran Thulasi | 38/1 Kachcheri East lane, Jaffna |
| 91. | Surendran Visall | 38/1 Kachcheri East lane, Jaffna |
| 92. | Kathirgamanathan Servaranee | 140/1 Manipy Road, Jaffna |
| 93. | Kathirgamanathan Brandon | 140/1 Manipy Road, Jaffna |
| 94. | Felix Anton Sellathurai | 6, Odakarai Road, Jaffna |
| 95. | Felix Anton Malini Mria | 6, Odakarai Road, Jaffna |
| 96. | Felix Anton Pradeepan | 6, Odakarai Road, Jaffna |
| 97. | Felix Anton Thiyogini | 6, Odakarai Road, Jaffna |
| 98. | Asirwatham M.B | 182, Second croos Street, |
| 99. | Asirwatham B | 182, Second croos Street, |
| 100. | Jeyaraja Nallathamby | 36/1B, Forest Office Lane |
| 101. | Jeyaraja Sathiyaranjani | 36/1B, Forest Office Lane |
| 102. | Jeyaraja Archubn | 36/1B, Forest Office Lane |
| 103. | Jeyaraja Arulpriyah | 36/1B, Forest Office Lane |
| 104. | Jeyaraja Saven | 36/1B, Forest Office Lane |
| 105. | Jeyaraja Sathish | 36/1B, Forest Office Lane |
| 106. | Jeganathan Padmandhan | C/o Dr.S.Padmanadan, |
| 107. | Jeganathan Dayamathy | C/o Dr.S.Padmanadan, |
| 108. | Walson Trevor | Mc Cloud Hospital, KKS Road |
| 109. | Walson Beverley | Mc Cloud Hospital, KKS Road |
| 110. | Thayalan Muthukumarasamy | Annai Illam, GPS Road |
| 111. | Thayalan Laxman | Annai Illam, GPS Road |
| 112. | Thayalan Biranavi | Annai Illam, GPS Road |
| 113. | Thayalan Shanthini | Annai Illam, GPS Road |
| 114. | Sthyananthan Manohany | 2A Brown Road, Jaffna |
| 115. | Sthyananthan Bhyran | 2A Brown Road, Jaffna |
| 116. | Thaynathan Kanagaligam | 594, KKS Road |
| 117. | Thaynathan Rajayogam | 594, KKS Road |
| 118. | Thaynathan Nila | 594, KKS Road |
| 119. | Thaynathan Thushnth | 594, KKS Road |
| 120. | Goneswaran Tharmarasah | Marisankudal, Illavalai |
| 121. | Sathiyavan Majuran, Mr | Urumpirai South, Urumpirai |
| 122. | Dr.Gowrie Nithiyanaththan | C/o Prof.Sivaligarajah, Pilliar Vethy, Thirunelvelly |
| 123. | Solangasenathirajan Sithamparanathan, Mr | Jayaluxsumi Vasa, Vathiri |
| 124. | Solangasenathirajan Sanjayan, Mr | Jayaluxsumi Vasa, Vathiri |
| 125. | Cheilliah Pathmanathan | Ariyalai, Jaffna |
| 126. | Xaviyathas Jeevarajah | 310, Point Pedro Road, Jaffna |
| 127. | Kanagarajah Mahaluxmy | Grand Bazzar, Mannar |
| 128. | Nagaratnam Ratnammah | Vaddu South, Vaddu |
| 129. | Mr.S Seviyathas | 401842055V |
| 130. | Kanagarajah Jeyakanthan | Contact No: 021 222 2265 |
| 131. | Ms.S Sutharsana | Contact No: 021 222 2265 |
| 132. | Mr. Nadarajah Vijeyakumar | 29, Moorthavinayagar Road, Nallur, Jaffna |
| 133. | Sivasubramaniam Sritharan | 297, Navala Road, Jaffna |
| 134. | Sivasubramaniam Kartikeyan | 297, Navala Road, Jaffna |
| 135. | Sivasubramaniam Kasthuri | 297, Navala Road, Jaffna |
| 136. | Ranjithkumar Rasiah | Neervely South, Neervelly |
| 137. | Siyamaladevi Jeyarajah | Neervely South, Neervelly |
| 138. | Manoharan Rasiah | Neervely South, Neervelly |
| 139. | Vasanthakumar Rasiah | Neervely South, Neervelly |
| 140. | Sinnppu Sennar | C/o A.Kandiah Allarai |
| 141. | Sinnppu Thilakavadi | C/o A.Kandiah Allarai |
| 142. | Sinnppu Niruba | C/o A.Kandiah Allarai |
| 143. | Sinnppu Nilany | C/o A.Kandiah Allarai |
| 144. | Gunaparan Tharumaligam | 32, Stanly Colleage Lane |
| 145. | Suriyakumaran Rajaratnam | 101 Kachcheri Nallur Road, Jaffna |
| 146. | Suriyakumaran Anyalli | 101 Kachcheri Nallur Road, Jaffna |
| 147. | Suthagaran Sarogini | Kokuvil West, kokuvil |
| 148. | Suthagaran Vithursan | Kokuvil West, kokuvil |
| 149. | Amalia Larralde | ICRC |
| 150. | Karin Eriksen | ICRC |
| 151. | Sathasivam Kannan | 629/1 Hospital Road, Chankanai |
| 152. | Mr.S Perinparajah | Batticallo |
| 153. | Alagarasa Lalithadevi, Mrs | Puloly West, Point Pedro |
| 154. | Alagarasa Nirmal | Puloly West, Point Pedro |
| 155. | Amuthaligam Ramanathar | Kovil Kadavai, Thunnalai Centre, Karaveddy |
| 156. | Thayapary Amuthaligam | Kovil Kadavai, Thunnalai Centre, Karaveddy |
| 157. | Santhirigah Rajenthiram | Kovil Kadavai, Thunnalai Centre, Karaveddy |
| 158. | Jejabalasingam Vimalampikai | 254,Palaly Road, Katharmadam |
| 159. | Kalawathidevi Mahenderan | Maddathady Lane, Manipay |
| 160. | Arumugam Thamotharampillai | 537 Sivan Ampan Veethy, Thirunelvelly |
| 161. | Arumugam Sivaganampikai | 537 Sivan Ampan Veethy, Thirunelvelly |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண நாள் ஒத்திவைப்பு

27.08.2006 (ஆவணி 11ஆம் நாள்)
ஞாயிற்றுக்கிழமை ஏழாலை புவனேஸ்வரி
அம்பாள் ஆலயத்தில்
செல்வன் சிவகுமார் அவர்களிற்கும்
செல்வி பிரபா அவர்களிற்கும்
நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்க முடியாத
காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
நடைபெறும் காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

**பெற்றோர்**

| | |
|---|---|
| **திரு.திருமதி தம்பிராசா**<br>உடுவில்மகளிர் பாடசாலை<br>மேற்கு வீதி, உடுவில்,<br>சுன்னாகம். | **திருமதி கௌரிபாலன்**<br>ஏழாலை மேற்கு,<br>சுன்னாகம் |

உ

## திருமண அழைப்பு
### (நாள் மாற்றம்)

நிகழும் மங்களகரமான விய வருஷம்
ஆவணி மாதம் 5ஆம் நாள் (21.08.2006)
செல்வன் த.ரூபேஜ்ராஜ் அவர்களுக்கும்
செல்வி சி.சிவாஜினி அவர்களுக்கும்
நடைபெற இருந்த திருமணம் ஆவணி மாதம்
11ஆம் நாள் (27.08.2006) ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிமுதல் காலை 10.30 மணிவரையும்
வரும் சுபநேரத்தில் மணமகள்
இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய்
வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

**திரு.திருமதி சு.தங்கராசா குடும்பத்தினர்,**
துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை.

**திரு.திருமதி சிதம்பரப்பிள்ளை குடும்பத்தினர்,**
மில் லேன், பிரம்படி,
கொக்குவில் கிழக்கு.

(53337)

## கண்ணீர் அஞ்சலி

20.08.2006 அன்று அமரத்துவம் அடைந்த
**சின்னத்தம்பி சிவமகாராசாவின்**
பிரிவால் மீளாத் துயர் அடைகின்றோம். அவர்களின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அமரர் அவர்களின்
ஆத்மா சாந்தியடைய ஆஞ்சநேயப் பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோயில் மருதனார்மடம்.

(சி/50902)



# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7674466 முதல் 7684222 வரை. சீட்டிழுப்பு இல. 265 திகதி 24-08-2006

வெற்றி எண்கள்

4 6 3 2 2 2 — சுப்பர் எண் 10

ஜக்பொட் பரிசு ரூ. 16,236,925/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெறோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 16,236,925/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 5,000/= | 430,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 863 | 500/= | 431,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8604 | 50/= | 430,200/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 85268 | 10/= | 852,680/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 1,000/= | 86,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 865 | 100/= | 86,500/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8520 | 20/= | 170,400/= |
| | | மொத்தம் ரூ. | 3,982,280/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 66,125/= | 529,000/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,511,280/=

ரூ. 66,125/- பெறுமதியான 8 மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 7680262-5-60 |
| அம்பாறை | 7675064-9-15 |
| கொழும்பு | 7683358-2-78 |
| புத்தளம் | 7677907-2-47 |
| நுவரேலியா | 7682595-5-11 |
| பொலனறுவை | 7679891-0-[illegible] |
| அநுராதபுரம் | 7679527-6-03 |
| மாத்தறை | 7676458-9-21 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 16,476,175/-

தொடர் இல. 6773073 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஆகஸ்ட் 28 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

## கல்வியியற் கல்லூரி நியமனம் மேலும் 110 பேரின் விவரம் திருகோணமலைக்கு!

திருகோணமலை,ஓக.26

கல்வியியற் கல்லூரிகளின் டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக மேலும் 110 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று கிடைத்துள்ளது என்று மாகாண கல்வியமைச்சு செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்தார்.

வெளிமாவட்டங்களுக்கு நியமனம் பெற்றவர்களில் 242 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று ஏற்கனவே கல்வி அமைச்சால் மாகாணக் கல்வியமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளும் பூர்த்தியடையவுள்ளன.

மேலும் 110 பேரின் விவரங்கள் கிடைத்துள்ளன. அவர்களுக்கு விரைவில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடத்துவது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார். (1)

## சுகாதார பரிசோதகர் பயிற்சியாளர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்.பிராந்திய பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் அனைத்து பொதுச் சுகாதார பரிசோதகர் பயிற்சி மாணவர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு (ஊரடங்கு நீக்கப்பட்டதும்) யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனைக்கு வருகை தருமாறு பயிற்சி இணைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## கண்டெடுக்கப்பட்டது

பூபாலசிங்கம் குடும்பத்தினரின் லண்டனுக்குரிய விமானப் போக்குவரத்து ரிக்கெட் நான்கு, வல்லைப் பாலத்தில் 19.08.2006 கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் உரிய ஆதாரத்துடன் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**செல்லத்துரை முருகையா**
செல்ல வளவு, சுன்னாகம் மத்தி,
சுன்னாகம்.

## தேவை

கணனி ரைப்செற்றிங் தெரிந்தவர்கள் உடன் தேவை. நேரில் வரவும்.

**ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங்**
43, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

NPHT - 4489 எனும் இலக்கத்துக்குரிய புத்தகம், காப்புறுதிப் பத்திரம் மற்றும் Tex என்பன நல்லூர் ஆலயச் சூழலில் 23.08.2006 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்
திரேசா தளபாட மாளிகை
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்
தலைவரும் சிறந்த கூட்டுறவாளரும்
சமூகசேவையாளருமாகிய
**சின்னத்தம்பி சிவமகாராசா**
அவர்களின்
திடீர் மறைவு குறித்து அதிர்ச்சியும் ஆழ்ந்த
கவலையும் அடைந்துள்ளோம். அன்னார்
கூட்டுறவுத் துறைக்கு ஆற்றிய
சேவைகளை நினைத்து அவர்களின் ஆத்ம
சாந்திக்காக பிரார்த்தித்து எம் கண்ணீர்
அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்க
அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலைய பதில் பெரும்பாக
உத்தியோகத்தர் திருமதி சா.குகநேசன்
அவர்களின் பாசமிகு மாமி
**திருமதி தா.மீனாட்சி** அவர்களின்
திடீர் மறைவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

நிலைய உத்தியோகத்தர்கள், சுமநல சேவைக்குழு
விவசாய சம்மேளனம், கமநலசேவை நிலையம், கீரிமலை.

(53342)

# மரண அறிவித்தல்கள்

## மாரிமுத்து துரைராசா



மயிலு வீதி, ஆறுகால்மடத்தைச் சேர்ந்த மாரிமுத்து துரைராசா நேற்று (25.08.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ரதியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - பொன்னி தம்பதியரின் அன்பு மகனும் பொன்னையா - மாரிமுத்து தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரன் (சுவிஸ்), பிறேமாவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மலோசனி, ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் பிரசன்னா, பிரவீனா, பிரேமதர்சன், மதுசன், மிதுசன், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2006) சனிக்கிழமை ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ரதியம்மா (மனைவி)**

(53355)

## அப்புத்துரை அழகராஜா



வண்ண அருவி அழகுமாடம் (கே.கே.எஸ்.றோட்) உரிமையாளரும் வீமன்காமம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் பருத்தித்துறை எரிஞ்சம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை அழகராஜா 24.08.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும் லலித்தாதேவியின் அன்புக் கணவரும் நிர்மல் (வணிக பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), சிந்துஜா, ஜெயாஈஸ்வரன், ஜெயவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமலர், அழகேந்திரன், இந்திராணி, இரஞ்சிதமலர், ஞானமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அ.அழகேந்திரன், க.கனகநாயகம்**
**(சகோதரர்கள்)**

எரிஞ்சம்மன் கோயிலடி,
பருத்தித்துறை.

(53346)

## த.கிருபைராஜா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட த.கிருபைராஜா 19.08.2006 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் மேரி மாகிறட்டின் அன்புக் கணவரும் ருசாந், வதனி, கருணா, தம்பன், ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.08.2006) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46 கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குழி.

தகவல்:
**ய.ஜோண்சன்.**

(53350)

## சின்னராசா ரட்ணசிங்கம்

**(முன்னாள் முகாமையாளர் - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)**



கோண்டாவில் தில்லையம்பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா ரட்ணசிங்கம் நேற்று (25.08.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னராசா - தங்கமலர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணை - லட்சுமி தம்பதியரின் மருமகனும் சிவரஞ்சனாவின் அன்புக் கணவரும் சைந்தனின் அன்புத் தந்தையும் சிவலிங்கம் (முன்னாள் முகாமையாளர் - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), சிவமலர், லிங்கராசா, சிறிதரன், யசோதா, விநோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.08.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**எஸ்.லிங்கராசா**
**(தில்லையம்பதி மோட்டோர்ஸ்)**

கோண்டாவில்,
தில்லையம்பதி.

(53348)

## வைத்திலிங்கம் அம்பலவாணர்

**(இளைப்பாறிய O.A., கச்சேரி - அம்பாறை, கச்சேரி - யாழ்ப்பாணம்)**

மூளாயைச் சேர்ந்த வைத்திலிங்கம் அம்பலவாணர் நேற்று (25.08.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் வைத்திலிங்கம் - வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பையாவின் அருமைச் சகோதரனும் ரகுராமின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.08.2006) சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பை வளவு,
மூளாய், சுழிபுரம்.

தகவல்:
**அன்னலட்சுமி (மனைவி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிராக நீளும் குற்றச்சாட்டு

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி, அமைதிப் பேச்சுக்களை உடன் ஆரம்பியுங்கள் என்று அடிக்கடி வற்புறுத்தி வருகின்ற இணைத் தலைமை அமைப்புக்களில் ஐரோப்பிய ஒன்றியமும் பிரதானமானது.

இலங்கையில் இன்று அமைதி கேள்விக் குறியாகி யுத்தம் நிதர்சனமாகும் சூழ்நிலையில் அந்நிலைமையை ஏற்படுத்தியதற்கான பொறுப்பு - குற்றச்சாட்டு - சம்பந்தப்பட்ட இரு தரப்புகளான விடுதலைப் புலிகள் மீதும், இலங்கை அரசு மீதும் இணைத் தலைமைகளால் சுமத்தப்பட்டு வருகையில் -

அதே குற்றச்சாட்டு இணைத் தலைமைகளில் இடம் பெறும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றது.

யுத்தத்தைத் தவிர்க்கும்படி ஆரவாரமாக அறிக்கைகள், அறிவிப்புகளை வெளியிடும் ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கியே யுத்த நெருக்கடியை ஏற்படுத்தியதற்கான குற்றச்சாட்டு விரல் நீட்டப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டை முன்வைப்பவர்கள் வேறு யாருமல்லர். இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்குப் பொறுப்பான அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் சார்பில் அந்தப் பணிக்கான விசேட தூதுவராகக் கடமையாற்றும் ஜான் ஹன்ஸன் போவரும், இலங்கை யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான சர்வதேசக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸனும் கூட இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பதற்கு - புலிகள் இயக்கத்தைத் தனது பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்ப்பதற்கு - ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கும் உத்தேச முடிவு எத்தகைய பின்விளைவுகளை ஏற்படுத்தும், இலங்கை அமைதி முயற்சிகளின் சமநிலைப் போக்கை அது எப்படிப் பாதிக்கும் என்பவையெல்லாவற்றையும் இப்பத்தியில் ஏற்கனவே - முன்கூட்டியே - விளக்கமாகவும், விஸ்தாரமாகவும் நாம் சுட்டிக் காட்டி வந்தோம்.

அப்படியே ஆன நிலையில், அதற்கான குற்றச்சாட்டை அனுசரணைப் பணிக்கான விசேட தூதுவரும், கண்காணிப்புக் குழுத் தலைவரும் ஐரோப்பிய ஒன்றியம் மீது சுமத்தியிருக்கின்றார்கள்.

*''ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடைசெய்ய முயன்றால் எழக் கூடிய பின்விளைவுகளை விளக்கமாகக் குறிப்பிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தை நேரத்துடனேயே எச்சரித்தோம். எங்களது கருத்து, உரிய முறையில் ஊன்றிக் கவனிக்கப்படவில்லை. அதைப் புறக்கணித்து விட்டு பிரஸல்ஸ் நகர (ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம் அமைந்துள்ள நகர) ஹோட்டல்களில் ஒன்று கூடியோர் புலிகளைத் தடை செய்யும் நடவடிக்கையை எடுத்தனர்.''* - என்று உல்ப் ஹென் றிக்ஸன் 'பச்சையாகவே' விடயங்களைப் போட்டுடைத்திருக்கின்றார்.

*''அந்த முடிவு தவறு என்றே கூறுவேன். அது பிழையான தீர்மானம்.*

*''ஏனென்றால் இலங்கை அரசும், புலிகளும் சமதரப்புப் பங்காளிகள் என்ற நிலையிலேயே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்தன. அப்படியிருக்கையில் ஒரு தரப்பைத் திடீரெனப் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் சேர்த்ததன் மூலம் அந்த சமதரப்பு நிலை குழப்பப்பட்டு விட்டது.''* - என்ற சாரப்பட கருத்து வெளியிட்டிருக்கின்றார் கண்காணிப்புக் குழுத் தலைவர்.

யதார்த்தங்களை - மெய்மைக் கள நிலையை - இன்னும் சில தினங்களில் தம்து பணியை முடித்துக் கொண்டு புறப்படவிருக்கும் உல்ப் ஹென்றிக்ஸன் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஆகவே, யுத்தத்தைத் தவிர்த்து, பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பெரியவர்களாக நின்று 'அட்வைஸ்' கொடுப்பதற்கு முன்னர், தாங்கள் ஏற்படுத்திய இக்குழப்பத்திலிருந்து இலங்கை நாட்டை மீளச் செய்வதற்கு - தங்கள் தவறைத் திருத்துவதற்கு - தாங்கள் எடுக்கப் போகும் நடவடிக்கைகள், செயற்பாடுகள் எவை, என்ன என்பனவற்றை ஐரோப்பிய ஒன்றியம் முதலில் வெளியிடுவது நல்லது. அதுவே இன்றைய நிலையில் பொருத்தமான நடவடிக்கையாகவும் அமையும்.

ஐரோப்பியஒன்றியத் தடை அறிவிப்பு வந்த கையோடு அது குறித்துப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்ட கருத்துகள் இப்போது மீளக் கவனத்தில் எடுத்து நோக்கற்பாலவை.

*''இத்தடை முடிவு நீதியற்றது; ஒரு தலைப்பட்சமானது; இலங்கை அரசு சார்பானது; பொருத்தமற்ற சமயத்தில் வந்திருக்கின்றது.*

*''தொடரும் வன்முறைகளுக்கு இரு தரப்பின் மீதும் குற்றம் சுமத்தப்படும் நிலையில் ஒரு பக்கத்துக்கு எதிராக மட்டும் - புலிகள் மீது மட்டும் - தண்டனை விதிக்கும் வகையில் இத்தகைய தடையை அறிவிப்பது இராஜதந்திர ரீதியில் தவறானது. பொருத்தமற்ற நேரத்தில் எடுக்கும் பொருத்தமற்ற முடிவு இது.*

*''தமிழ் மக்களின் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய தனது பொறுப்புகளிலிருந்து இலங்கை அரசு தவறி, தவறிழைத்து வரும் நிலையில் மற்றைய தரப்பைத் தண்டிக்கும் வகையில் இத்தடைத் தீர்மானம் ஏன் அவசரப்பட்டு எடுக்கப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.*

*''இத்தடை, அமைதி முயற்சிகளில் புலிகளுக்கு உள்ள சமதரப்பு என்ற அந்தஸ்தைப் பாதிக்கும். இது அமைதி முயற்சிகளில் தமிழர் தரப்பின் பேரம் பேசும் வலுவையும் அடியோடு குலைக்கும். அதேசமயம், ராஜபக்ஷ அரசின் தீவிர பௌத்த - சிங்களக் கோட்பாட்டுப் போக்கையும், நடவடிக்கைகளையும் அது ஊக்குவிக்கும். அதனால், நிலைமை மோசமடைய இனப்போர் வெடிக்கும்,''* - என்று அப்போது எச்சரித்திருந்தார் பாலசிங்கம்.

அவர் அன்று கூறியவை இன்று நிதர்சனமாகின்றன. அவ்வளவே.

# சகல பகுதிகளிலும் நிவாரணப் பணியை முன்னெடுக்க குடாநாட்டில் ஒரேநேரத்தில் ஊரடங்கைத் தளர்த்தி உதவுக!

## தொண்டு அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.26

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணப் பணி மற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்க வசதியாக ஒரே நேரத்தில் சகல பகுதிகளிலும் ஊரடங்கைத் தளர்த்த வேண்டும்.

இப்படிக் கோரியுள்ளன உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு அமைப்புக்கள்.

தற்போதுள்ள நிலைமை குறித்து ஆராய்வதற்காக 40 இற்கு மேற்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்றுக் காலை அரசசார்பற்ற அமைப்புக்களின் இணைய அலுவலகத்தில் கூடினர்.

இணையத்தின் தலைவர் எஸ்.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஒவ்வொரு அமைப்பும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்து விளக்கினர்.

அங்கு எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

✱ உள்ளூரில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இருப்பவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் இடம்பெயர்ந்து நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப் போருக்கும் வழங்கப்பட வேண்டும்.

✱ நாளாந்த வேலைசெய்து உழைப்பவர்கள் தற்போது வருமானம் இன்றி உள்ளனர். அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

✱ நிவாரணப் பணியில் ஈடுபடும் சகல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் ஊரடங்கு பாஸ் வழங்க வேண்டும்.

✱ ஐந்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிவாரணப் பொருள்களை எடுத்து வருவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை. அந்த நிறுவனப் பிரதிநிதிகள், தமது அலுவலகங்களைப் பூட்டி விட்டு கொழும்பு சென்று மனிதநேய அமைப்பு ஒன்றியத்துடன் தொடர்புகொள்ள விரும்புகின்றனர்.

✱ அரச சார்பற்ற நிறவங்களின் பிரதிநிதிகளுக்கு ஏற்பட்டுள்ள பயப்பீதி, நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் நீங்க அரச அதிபரிடம் பேச்சு நடத்துவது.

✱ ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி, மிருசுவில் ஆகிய பகுதிகளுக்குச் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். (1)

## யாழ்.மாநகரசபையின் சிகிச்சை நிலையங்களில் பணிகள் மீண்டும் வழமைக்கு

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சகல சிகிச்சை நிலையங்களும் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளன என்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

சகல சிகிச்சை நிலையங்களிலும் குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்து ஏற்றப்படுவதுடன், கர்ப்பவதிகளுக்கான சிகிச்சைகளும் குறிப்பிட்ட இடங்களில் - குறிப்பிட்ட தினங்களில் நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தேசிய கல்வி நிறுவக மீள்பரீட்சை மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.26

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா முதலாம் ஆண்டு மீள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களை நிறுவனத்தின் பிராந்திய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதனுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.



தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஆயிரக்கணக்கான அடியவர்கள் இதில் கலந்து கொண்டனர். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த அடியவர்கள், ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அரச, தனியார் பஸ்கள் மூலமும் மற்றும் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் மூலமும் ஆலயத்திற்கு வருகை தந்தனர். கொடியேற்றத்தைத் தொடர்ந்து விநாயகர், முருகன் சமேதராக துர்க்கை அம்பாள் வீதியுலா வருவதை படத்தில் காணலாம். (படம்: நேசன்)

# மட்டு. முகத்துவாரத்தில் 5 இளைஞர்கள் அதிரடிப் படையினரால் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு,ஓக.26

மட்டக்களப்பு மாவட்டம் முகத்துவாரம் வீதியில், மயானச் சந்திக்குச் சமீபமாக நேற்றுமுன்தினம் இரவு தமிழ் இளைஞர்கள் ஐவர் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மட்டக்களப்பு நகரிலிருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள புதிய முகத்துவாரம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

மட்டு.நாவற்கேணியிலிருந்து நேற்று முன்தினம் மாலை வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இதனையடுத்து அப்பகுதிக்கு ஜீப் மற்றும் 'டிரக்' வண்டிகளில் வந்த அதிரடிப்படையினர் அரிசி ஆலை ஒன்றில் தொழில் புரியும் இளைஞர் ஒருவர் உட்பட ஐவரைப் பிடித்துச் சென்றனர் என்றும் - பின்னர் அவர்கள் அனைவரும் அப்பகுதியிலுள்ள ரயில் பாதைக்கு அருகில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இவர்கள் ஐவரது சடலங்களும் நேற்று அதிகாலை மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன. ஐவரில் செங்கலடியைச் சேர்ந்த தர்மராஜா ஆனந்தராஜா (வயது-28), குமாரபுரம் புன்னைச் சோலையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை சுதர்ஸன் (வயது-26) ஆகிய இருவரும் நேற்றுக் காலை அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

மற்றைய இளைஞர்கள் மூவரும் திராய்மடு, பாலமீன்மடு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்ட போதிலும் அவர்கள் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை.

இதேவேளை -

இவர்கள் ஐவரும் புலிகள் உறுப்பினர்கள் என்றும் - அதிரடிப்படையினர் மீது தாக்குதல் நடத்த வந்தபோதே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் படைத்தரப்பினர் தெரிவித்தனர். (க)

# அரச ஊழியருக்கு சம்பளம் வழங்க கொழும்பிலிருந்து திரவப்பணம்

## இலங்கை வங்கி அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.26

குடாநாட்டில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக கொழும்பிலிருந்து ஒரு தொகை திரவப் பணம் எடுத்துவரப்பட்டுள்ளது என்று இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் என்.சீவரத்தினம் தெரிவித்தார்.

திணைக்களங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரி ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்காக கொழும்பில் ஒருதொகைத் திரவப் பணம் எடுத்துவரப்பட்டது என்றும் - அப்பணம் பங்கிடப்பட்டு சகலருக்கும் நேற்று வழங்கப்பட்டது என்றும் அவர் மேலும் கூறினார்.

மக்களின் தேவைக்கேற்ப அவர்களுக்குத் தேவையான பணத்தை வழங்கி வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஊடரங்கு தளர்த்தப்படும் நேரம் மாறுபடுவதால், யாழ்ப்பாணத்திலிருந்து வங்கி அதிகாரிகள் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்படுகின்றது என்றும் - இதனால் அந்தப் பிரதேசத்தில் மக்களுக்குரிய சேவையை வழங்கமுடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குடாநாட்டிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளுக்கு ஒருதொகை திரவப் பணம் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1)



அமைச்சர்களாக நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்ட ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க முன்னிலையில் கைலாகு கொடுத்து மகிழ்ச்சியை பரிமாறிக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள றுகுணு கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் பணி முழு வீச்சில் இடம்பெற்று வருகிறது. கப்பலிலிருந்து பாஜ்கள் மூலம் பொருள்கள் கரைக்கு எடுத்துவரப்படுவதையும் அவ்வாறு எடுத்துவரப்பட்ட பொருள்கள் லொறிகளில் ஏற்றப்படுவதையும் படங்களில் காணலாம்.

## இராஜதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட தரப்புகளோடு பகிர்ந்து வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, நோர்வேயின் சார்பில் வெளிநாடுகளில் தூதுவர்களாகப் பணியாற்றும் இராஜதந்திரிகளுக்கான வருடாந்த ஒன்றுகூடல் ஓகஸ்ட் - செப்டெம்பர் மாதங்களில் ஒஸ்லோவில் நடைபெறுவதை ஒட்டி அதில் பங்குபற்றுவதற்காக தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் ஒஸ்லோவில் தங்கியிருக்கின்றார்.

இவர்களும் ஒஸ்லோவில் தங்கியிருக்கும் ஜோன் ஹான்ஸன் போவர், அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் இலங்கை விவகாரத்தைக் கையாளும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் ஆகியோரும் இலங்கை நிலைமை குறித்துக் கடந்த சில தினங்களாகப் பல சுற்றுப் பேச்சுகளையும், ஆலோசனைகளையும், சந்திப்புகளையும் தனித் தனியாகவும், கூட்டாகவும் நடத்தி வருகின்றனர் என ஒஸ்லோத் தகவல்கள் தெரிவித்தன.

மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரணைச் சந்தித்தார் என அறியவந்தது.

நேற்று அமைச்சர் சொல்ஹெய்ம், விசேட தூதுவர் ஹான்ஸன் போவர், தூதர் பிரட்ஸ்கர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண் ஆகியோருக்கிடையில் முக்கிய சந்திப்பு ஒன்று கூட்டாக நடக்கவிருந்ததாகவும் தெரியவந்தது.

இலங்கை இனப்பிரச்சினை நெருக்கடி முழு அளவிலான போராக விரிவடைவதைத் தடுப்பதற்காக அவசரமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை என்பது குறித்து அடையாளம் காண்பதிலேயே இந்த இராஜதந்திர வட்டாரங்கள் அதிகம் சிரத்தை காட்டி வருகின்றன என்றும் ஒஸ்லோத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

## 'றுகுணு'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக ப.நோ.கூ. சங்கங்களுக்கு அனுப்ப ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது என்றும் -

ஆனால், பொருள்களை ஒழுங்காக இறக்கமுடியாத காரணத்தால் களஞ்சியப்படுத்தி பின்னர் விநியோகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அரச அதி பர் தெரிவித்தார்.

கோண்டாவில் களஞ்சியத்தில் வைக்கப்படும் பொருள்கள் நாளைமுதல் ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (1-70)

## கண்காணிப்புக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியை முடித்து நாடு திரும்பும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் நினைவுப் பரிசினை வழங்கிக் கௌரவித்தனர்.

இச் சந்திப்பின்போது நெருக்கடியான காலகட்டத்தில் கடமையாற்றிச் செல்லும் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கும் அவருடன் செல்லும் 21 பேருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைப் பீடம் இதன்போது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

சிறிலங்கா அரசாங்கத்தின் பொய்யான பரப்புரைகளை நம்பி ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த தீர்மானத்தினால் ஏற்பட்ட இந்த நிலைமை குறித்து விடுதலைப் புலிகள் தமது வருத்தத்தையும் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சிறிலங்கா விமானப்படையின் தாக்குதல்கள் குறித்தும் இருவரிடமும் எடுத்துக் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்தும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் கண்காணிப்புக் குழுவினரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2பிள்ளைகளின் தந்தையாரான சதாசிவம் லிங்கேஸ்வரன் (வயது 47) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

காலை 8.15 மணியளவில் தமது வீட்டிலிருந்து வெளியே - மானிப்பாய் சண்டிலிப்பாய் வீதிக்கு - வந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமதியம் சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் சடலத்தைப் பார்வையிட்டுள்ளார். மரணவிசாரணையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார். (86-29)

## செஞ்சிலுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பயணிகள் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்கள் மூலம் பருத் தித்துறைத் துறைமுகத்துக்கு அழைத்துச்செல்லப்படுவர் என்றும் -

ஒவ்வொரு பயணியும் 20 கிலோ வரையான பொருள்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தூதரகங்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து வெளிநாட்டிலிருந்து வந்த பயணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று கப்பல் சேவை குறித்து அரச அதிபர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கப்பலில் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு முன்னுரிமையோடு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் சிபாரிசு செய்யப்படும் நோயாளர்கள், மரணச்சடங்குகளுக்குச் செல்வோர், அரசாங்கப் பரீட்சை எழுதவேண்டியவர்கள் மற்றும் உடனடியாக புலமைப்பரிசில் உதவிக்காக வெளியே செல்லவேண்டிய அரச உத்தியோகத்தர்கள் விவாக ஏற்பாடு செய்யப்பட்டவர்களுக்கும், இடம் வழங்கப்பட்டுள்ளது. (1)

(பயணிகள் விவரம் 03ஆம் பக்கத்தில்)

## வதிரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றனர். அப்பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் திடீரென வந்திறங்கிய படையினர் 16 பேரையும் கைது செய்து கூட்டிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் பின்னர் விடுவிக்கப்பட்டார். ஏனைய 15 பேரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். (த-70)

## பங்குத் தந்தையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டிலுள்ள அல்லைப்பிட்டியில் காணாமற்போயுள்ளனர். ஆறு நாள்கள் கடந்துவிட்ட நிலையில், இது விடயமாக உரிய அதிகாரிகளிடமிருந்து பதில் ஏதும் கிடைக்காததால் உரிய பதிலை உடனடியாகத் தருமாறு கேட்டு தொடர் உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

## 'மிக்' ரக விமானங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும், இதன்போது உயிர் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (க)

# புலிகளுக்கு எதிரான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றி வரும் இராமன், இத்தகவலைக் கடந்த 18ஆம் திகதி தாம் வரைந்த கட்டுரை ஒன்றில் வெளியிட்டிருக்கின்றார் என இணையத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

''பங்கர்களை(பதுங்கு குழிகளை) தகர்க்கும் விமானக் குண்டு வீச்சுகள் மூலம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொன்றொழிக்கும் திட்டம் ஒன்றை வகுப்பதிலும் பாகிஸ்தான் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.'' - என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

பாகிஸ்தான் விமானப்படையின் பிரதி சிரேஷ்ட அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற ஏயர் வைஸ் மார்ஷல் ஷிகாட் அஸ்லம் சௌத்ரி, இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய தூதராக நியமிக்கப்பட்டமை, இலங்கைக்கான பாகிஸ்தான் உதவிகளை மேலும் வலுப்படுத்தியிருப்பதாகக் கூறும் இராமன், இந்த நகர்வு இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக் குறித்து இந்தியாவுக்குக் கவலையளிப்பதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

''பாகிஸ்தான் விமானப்படையின் நான்கு, ஐந்து பேர் உட்பட பாகிஸ்தான் படைகளைச் சேர்ந்த சுமார் 12 முதல் 15 பேர் வரை கொழும்பில் நிலை கொண்டிருந்து இலங்கைப் படைகளின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை வழிப்படுத்தி வருகின்றனர்.'' - என்று தமிழ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இராமன் எழுதுகின்றார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புலிகளுக்கு எதிரான வான்வழித் தாக்குதல்களை இலங்கை விமானப்படையினர் பயனுள்ள வகையில் மேற்கொள்வதற்கு பாகிஸ்தான் விமானப் படை அதிகாரிகள் வழிகாட்டி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

பதுங்கு குழிகளைத் தகர்க்கும் வான்வழித் தாக்குதல் மூலம் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொன்றொழிப்பதற்கான திட்டங்களை வரைவதிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு முன்னரே, புலிகளுக்கு எதிரான இலங்கைப் படைகளின் நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதன் மூலம் பாகிஸ்தான் இலங்கை விடயத்தில் ஜாக்கிரதையான பங்களிப்பைச் செய்துவந்துள்ளது. கிளர்ச்சி யாளருக்கு எதிரான நடவடிக்கைகளில் தனது ஈடுபாட்டை அது இப்போது மேலும் அதிகரித்திருக்கின்றது.

இலங்கையின் முப்படைகளைப் பொறுத்தவரை விமானப்படையுடன்தான் அதிகளவு உறவை பாகிஸ்தான் கொண்டுள்ளது.

இலங்கை விமானப்படையின் விமானங்கள் மற்றும் ஏனைய கருவிகளை பழுது பார்த்தல் மற்றும் பேணுதல் போன்ற விடயங்களில் பாகிஸ்தான் விமானப்படையின் தொழில்நுட்பவியலாளர்கள் முக்கிய பங்குவகிக்கின்றனர். இலங்கை விமானப்படை விமானங்கள் முழு அளவிலான சீராக்கலுக்காகப் பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகின்றன.

ஓய்வுபெற்றுச் செல்லும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவரான கேணல் பஷீர் வலி மொஹமட்டின் இடத்துக்கு ஏயர் வைஸ் மார்ஷல் ஷிகாட் அஸ்லம் சௌத்ரி நியமிக்கப்படுவதை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஏயர் வைஸ் மார்ஷல் சௌத்ரி, பலூசிஸ்தான் விடுதலைப் போராளிகளுக்கு எதிரான வான் தாக்குதல்களை முன்னர் கையாண்டவர். புலிகளை அடக்கி, தமிழ்க் குடிமக்களை அச்சுறுத்தும் இலங்கை வான் தாக்குதல்களில் பாகிஸ்தானின் ஈடுபாட்டை இவரின் நியமனம் அதிகரிக்க வைக்கும்.

இதனை ஆட்சேபிப்பதை நியாயப்படுத்த முடியாத நிலையில் இந்தியா இருந்தாலும், கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் பாகிஸ்தானின் ஈடுபாடு அதிகரிப்பது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு நோக்கில் இந்தியாவுக்கு ஆழ்ந்த கவலைதரும் விடயமாகும்.

இலங்கை - பாகிஸ்தான் படைகளுக்கு இடையில் மறைவிலான ஒட்டுறவு நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இருந்து வந்துள்ள போதிலும் பாகிஸ்தானின் கூட்டு சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் தலைவர் ஜெனரல் மொஹமட் அஸீஸ் கான் 2003 செப்டெம்பரில் இலங்கைக்கு விஜயம்செய்த பின்னரே அது மேலும் தீவிரமடைந்தது.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராணுவ - இராணுவ உறவுகளைக் கடந்த காலத்தில் எப்போதும் இந்தியா ஆட்சேபித்திருக்கவில்லை. ஆனாலும் ஜெனரல் அஸீஸ் கான் இலங்கைக்கு மேற்கொண்ட இரகசிய விஜயம் இந்தியாவை குழப்பத்துக்குள் ஆழ்த்தியுள்ளது.

ஏனெனில், பல்வேறு ஜிகாத் பயங்கரவாதக் குழுக்களின் பெயர்கள் ஊடாக இந்தியா மீது பாகிஸ்தான் தொ[illegible]த பல்வேறு யுத்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தவரும், கார்கிலில் இந்தியப் பிரதேசத்தை சத்தம் சந்தடியின்றி ஆக்கிரமித்த நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியவரும் இந்த அஸீஸ் கான்தான்.

பாகிஸ்தான் ஆலோசகர்கள் செல்வாக்குச் செலுத்தும் நிலையில், இலங்கை அரசின் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஈவு இரக்கமற்ற தன்மை அதிகரித்து வருகிறது. வான், தரை நடவடிக்கைகளில் ஒன்று மறியா அப்பாவிக் குடிமக்கள் இலக்கு வைக்கப்பட்ட சம்பவங்கள் - சந்தர்ப்பங்கள் - பல இடம் பெற்றுள்ளன.

இத்தகைய போக்கு அதிகளவில் தமிழர்களை புலிகள் பக்கமே திருப்பிவிடும்.

அண்மைக்காலத்தில் இலங்கைப் படைகளால் அப்பாவி சிவிலியன்கள் படுகொலை செய்யப்படுவது, கடந்த டிசெம்பரில் ராஜபக்ஷ பதவியேற்ற பின்னரே அதிகரித்திருக்கின்றது. அவர் பதவியேற்ற பின்னர் பாகிஸ்தானின் பங்களிப்பு அதிகரித்திருக்கின்றது - இப்படி இராமன் மேலும் தெரிவித்திருக்கின்றார். (உ)

## ஜோஸப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப் பதில்களும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. பின்னர் மூன்று தனிநபர் பிரேரணைகள் சபையில் விவாதங்களின்றி நிறைவேற்றப்பட்டன.

ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பியின் மறைவு குறித்த அனுதாபப் பிரேரணை இரண்டாவது நாளாகக் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்றபோது கூட்டமைப்பு எம்.பி.கே. சிவாஜிலிங்கம் உரையாற்றிக்கொண்டிருந்தார். நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும்வேளையில் சபாநாயகர், சிவாஜிலிங்கம் எம்.பி யிடம் ''நீங்கள் அடுத்த அமர்வில் தொடர்ந்து பேசலாம்'' எனத் தெரிவித்து சபையை ஒத்திவைத்தார்.

இருந்தும் நேற்று சிவாஜிலிங்கம் எம்.பி. சபையில் இருக்கவில்லை. அனுதாபப் பிரேரணையில் யாரும் பேச விரும்புகின்றீர்களா என சபாநாயகர் கேட்டபோது யாரும் உரையாற்றமுன்வராத நிலையில் சபையை சபாநாயகர் எதிர்வரும் செப்டெம்பர் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.பிக்கள் எவரும் சபையில் இருக்கவில்லை. சபை ஒத்திவைக்கப்பட்ட பின்னர் சிவநாதன் கிஷோர் எம்.பி. சபைக்கு வந்தார்.

சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்த எட்வர்ட் குணசேகர எம்.பி. சபையில் இல்லாத காரணத்தால் சபை ஒத்திவைக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.